**உள்ளூராட்சி மேம்பாட்டுத் துறைச் செயற்திட்டம் (புற நெகும) - 2013**

உள்ளூராட்சி மேம்பாட்டுத் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) 2013 யூலை 01 முதல் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 2790 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

உள்ளூராட்சி மேம்பாட்டுத் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) கடன் உடன்படிக்கையின்படி உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் ஏழு மாகாணங்களிலுள்ள மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. கணக்களி தகமை, நிதியளிப்பு மற்றும் தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் ஊடாக முன்னேற்றப்பட்ட உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மற்றும் வினைத்திறனான சேவை வழங்கல் என்பவற்றினை எய்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 68.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர், செயற்திட்டக் காலப்பகுதி 2016 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய

தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு

இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா. 321,601,820 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 337,373,655 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், 2012 யூலை 01 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவறான திரண்ட செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| செலவின விடயம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் | 2012 யூலை 01 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் மற்றும் உபகரணங்கள் | 140,721,981 | - | 140,721,981 |
| ஆலோசனை சேவைகள் | 89,558,874 | 7,293,093 | 96,851,967 |

| | | | |
|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 574,948 | 73,095 | 648,043 |
| வட்டி | 960,887 | 236,287 | 1,197,174 |
| செயற்பாட்டுக் கிரயம் | 89,785,130 | 8,169,360 | 97,954,490 |
| மொத்தம் | 321,601,820 | 15,771,835 | 337,373,655 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலத்தின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | ஐ. அ. டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 120,848.56 | 15,367,200 |
| கூட்டு: | | |
| மீளளிப்புகள் | 2,900,818.80 | 379,746,568 |
| மீள்மதிப்பு இலாபம் | - | 470,855 |
| | 3,021,667.36 | 395,584,623 |
| கழி:- பற்றுதல்கள் | 1,768,532.17 | 231,733,437 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,253,135.19 | 163,851,186 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் 5(டி) பிரிவின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டின் இறுதியில் 09 மாதங்களிற்குள் கடனளிக்கும் முகவருக்கு நிதியளிக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் வரைவு நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 07 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் ஒழுங்கமைப்பின் பிரகாரம், ஏழு மாகாணங்களில் தாபிக்கப்பட்ட உப செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவு செயற்திட்ட நடவடிக்கைகளை கணக்கீட்டு மற்றும் நிர்வாக நோக்கங்களிற்காக தனித்தனியான பதிவேடுகளைப் பேணுதல் என்பவற்றுக்கான அமுலாக்கத்திற்கு பொறுப்பாகவுள்ளன. எவ்வாறாயினும், சில உப செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவு மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்ட ஏனைய வளங்கள் மற்றும் ஏற்பட்ட செலவினம் என்பன இனங்காண்பதற்கு போதிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(i) வட மேல் மாகாணத்தில் உப செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 424,647 தொகையான செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 87,111,839 பெறுமதியான உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2013 திசெம்பர் 31 வரையும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 5.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) சொத்துக்களின் உள்ளதன்மையை மதிப்பிடுவதற்கு நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம், ரூபா 87,759,882 பெறுமதியான செயற்திட்டத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மீதான கணிப்பீட்டுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 371(அ) இன் பிரகாரம், முற்பணங்கள் வழங்கப்படுகின்ற நோக்கம் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் உடனடியாக தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவுக்கு இணைக்கப்பட்ட செயற்திட்ட உத்தியோகத்தர்களால் 32 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 660,837 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்கள் 27 முதல் 345 நாட்கள் வரையான வீச்சிலான தாமதங்களுடன் தீர்க்கப்பட்டிருந்தது. மேலும், 04 உத்தியோகத்தர்கள் அவர்கள் முன்னர் எடுத்திருந்த முற்'பணங்களை தீர்க்காமல் 28 சந்தர்ப்பங்களில் முற்பணங்கள் பெற்றிருந்தனர் என அவதானிக்கப்பட்டது.

## 6 நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட தொகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு | | ஏற்பாட்டின் சதவீதமாக 2012 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 59.00 | 6,490 | 475 | 340 | 3.69 | 368 | 6.25 |
| இலங்கை அரசாங்கம் | 9.77 | 1,075 | 75 | 67 | 0.70 | 71 | 7.16 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மொத்தம்** | **68.77** | **7,565** | **550** | **407** | **4.39** | **439** | **6.7** |

தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் உள்ளடக்கிமை காரணமாக செயற்திட்டத்தின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையுடன் இந்த தொகை உடன்பட்டிருக்கவில்லை.

**6.2 பௌதீக செயலாற்றல்**

செயற்திட்ட தயாரிப்பு தொழில்நுட்ப உதவி அறிக்கையின் பொது நிபந்தனையின் பிரகாரம், செயற்திட்டமானது அவர்களுடைய ஒவ்வொரு நிர்மாணக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு 176 பிரதேச சபைகளிற்காக ரூபா 50 மில்லியன் தொகை ஒதுக்குவதற்கு உடன்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட சிவில் வேலைகள் மீதான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| **மாகாணம்** | **உடன்பட்ட தொகை** | **ஒதுக்கப்பட்ட உப செயற்திட்டங்களின் எண்ணிக்கை** | **2014 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு சிவில் வேலைகளின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|---|---|
| | | | **பூர்த்தியாக்க வேண்டிய நிர்மாண வேலைகள்** | **பூர்த்தியாக்கப் பட்ட நிர்மாண வேலைகள்** | **பூர்த்தியாக்கப் பட்டிருக்காத நிர்மாண வேலைகள்** |
| வட மத்திய | 650 | 28 | 19 | 02 | 07 |
| மத்திய | 900 | 28 | 15 | 01 | 12 |
| சபரகமுவ | 800 | 25 | 12 | - | 13 |
| வட மேல் | 650 | 21 | 14 | 01 | 06 |
| ஊவா | 800 | 27 | 13 | 02 | 12 |
| தென் | 1,100 | 29 | 16 | 01 | 12 |
| மேல் | 500 | 18 | 09 | - | 09 |
| | 5,400 | 176 | 98 | 07 | 71 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் மூடப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ள போதிலும் பிரதேச சபைகளிற்காக நிர்வாக கட்டிடங்களின் நிர்மாணத்தின் முன்னேற்றம் 2014 ஒக்தோபர் 30 இல் 7 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

(ஆ) 176 நிர்மாணக் கட்டிடங்களில் 71 நிர்மாண வேலைகள் செயற்திட்ட அமுலாக்கலின் 1½ ஆண்டுகள் கடந்த பின்னரும் தொடங்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆதலால், சிவில் நிர்மாண வேலைகளின் உள்ளக முன்னேற்றம் மெதுவாக இருந்தன என்பதைக் குறிக்கின்றது.

**6.3 சொத்துக்களின் தவறான பயன்படுத்தல்**

2013 செப்தெம்பர் 11 இல் தென் மாகாணத்தில் வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 3,450,574 பெறுமதியான டிரக் வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினர் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.